**தலைப்பு 152 – நீர்ப்பாசன, நீர்வளங்கள் முகாமைத்துவ அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை – 2013 ஆம் ஆண்டு**

---

இந்த அறிக்கை இரண்டு பகுதிகளை உள்ளடக்கியுள்ளது.

1 ஆம் பகுதி - அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களங்களின் கணக்குகள் தொடர்பான சுருக்கமான அறிக்கை

2 ஆம் பகுதி - ஒவ்வொரு தலைப்புக்குமான விபரமான அறிக்கை

## 1 ஆம் பகுதி

**நீர்ப்பாசன, நீர்வளங்கள் முகாமைத்துவ அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களங்களின் கணக்குகள் மீதான சுருக்கமான அறிக்கை**

---

**1. அமைச்சின் கீழுள்ள திணைக்களம்**

| தலைப்பு | திணைக்களத்தின் பெயர் |
|---|---|
| 282 | நீர்ப்பாசனத் திணைக்களம் |

**2. கணக்குகள்**

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

**(அ) மொத்த ஏற்பாடு மற்றும் செலவினம்**

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களத்திற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மொத்த தேறிய நிதி ஏற்பாடு ரூபா 41,336,420,741 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதிவரை இதில் ரூபா 30,898,578,088 பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கிணங்க அமைச்சினதும் திணைக்களத்தினதும் தேறிய நிதி ஏற்பாடுகளிலிருந்தான சேமிப்புக்கள்

முறையே ரூபா 9,791,851,237 மற்றும் ரூபா 645,991,416 தொகை அதாவது தேறிய நிதி ஏற்பாட்டில் 29 சதவீதம் மற்றும் 8 சதவீதமாக இருந்தது. விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| **தலைப்பு** | **2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு** | | | **தேறிய ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்புக்கள்** |
|---|---|---|---|---|
| | **தேறிய நிதியேற்பாடு** | **பயன்பாடு** | **சேமிப்புக்கள்** | |
| | **ரூபா** | **ரூபா** | **ரூபா** | |
| 152 | 33,184,515,741 | 23,392,664,504 | 9,791,851,237 | 29 |
| 282 | 8,151,905,000 | 7,505,913,584 | 645,991,416 | 8 |
| மொத்தம் | 41,336,420,741 | 30,898,578,088 | 10,437,842,653 | 25 |

**(ஆ) ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களினால் வழங்கப்பட்ட ஏற்பாடுகளின் பயன்பாடு**

பல்வேறு கருமங்களுக்காக ஏனைய அமைச்சுக்கள், திணைக்களங்களின் மூலம் ரூபா 1,682,958,184 கூட்டுமொத்தமான ஏற்பாடு நீர்ப்பாசனத் திணைக்களத்திக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் அந்த ஏற்பாடுகளின் பயன்படுத்தல் தொடர்பான விபரங்கள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| **அமைச்சு /திணைக்களம்** | **2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஏற்பாடு** | **2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பயன்பாடு** | **2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சேமிப்பு** | **நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்புக்கள்** |
|---|---|---|---|---|
| | **ரூபா** | **ரூபா** | **ரூபா** | |
| நீர்ப்பாசன, நீர்வளங்கள் முகாமைத்துவ அமைச்சு | 1,596,194,845 | 1,328,118,749 | 268,076,096 | 17 |

| | | | | |
|---|---|---|---|---|
| காணி, காணி அபிவிருத்தி அமைச்சு | 18,000,000 | 11,917,708 | 6,082,292 | 34 |
| கமத்தொழில் திணைக்களம் | 10,677,339 | 7,585,617 | 3,091,722 | 29 |
| பொருளாதார அபிவிருத்தி அமைச்சு | 58,086,000 | 52,759,968 | 5,326,032 | 09 |
| | -------------- | --------------- | -------------- | |
| | **1,682,958,184** | **1,400,382,042** | **282,576,142** | 17 |
| | ========== | ========== | ======== | |

**2.2 முற்பணக் கணக்குகள்**

**2.2.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்**

**பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களத்திற்காக அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| விடய இல. | செலவினம் | | பெறுவனவு | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|---|
| | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானவை | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடியானவை | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 15201 | 11,000,000 | 9,379,359 | 5,500,000 | 7,133,339 | 38,000,000 | 32,029,419 |
| 28201 | 146,000,000 | 94,284,048 | 102,000,000 | 114,550,385 | 500,000,000 | 334,941,255 |

## 2.3 கட்டுநிதி மற்றும் பொது வைப்புக் கணக்குகள்

### 2.3.1 கட்டுநிதிக் கணக்குகள்

அமைச்சின் 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு கட்டுநிதிக் கணக்குகளின் மீதி ரூபா 513,909 ஆக இருந்தது.

### 2.3.2 பொது வைப்புக் கணக்குகள்

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களத்தில் 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு வைப்புக் கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 434,874,298 ஆகும். விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| அமைச்சு / திணைக்களம் | வைப்புக் கணக்கின் இலக்கம் | 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு மீதி |
|---|---|---|
| | | ரூபா |
| நீர்ப்பாசன, நீர்வளங்கள் முகாமைத்துவ அமைச்சு | 6000/0000/00/0015/0063/000 | 31,052,622 |
| நீர்ப்பாசனத் திணைக்களம் | 6000/0000/00/0001/0022/000 | 11,222,229 |
| | 6000/0000/00/0015/0137/000 | 392,599,447 |
| மொத்தம் | | 434,874,298 |

## 2 ஆம் பகுதி

## ஒவ்வொரு தலைப்பிற்கும் உரிய விபரமான அறிக்கை

## 1. தலைப்பு 152 – நீர்ப்பாசன, நீர்வளங்கள் முகாமைத்துவ அமைச்சு

### 1.1 கணக்காய்வின் நோக்கெல்லை

நீர்ப்பாசன, நீர்வளங்கள் முகாமைத்துவ அமைச்சின் 2013 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கை, இணைக்கக் கூற்றுக்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் உள்ளடக்கப்பட்ட ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையில் உள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2015 சனவரி 27 ஆம் திகதி அமைச்சுச் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணைக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள், கருத்துரைகள், மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணைக்கக் கூற்றுக்களின் மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகளது, போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு உள்ளடக்கத்தினை கொண்டு காணப்படுகின்றது.

### 1.2 கணக்குகள் மற்றும் இணைக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

ஒதுக்கீட்டுக் கணக்கு, இணைக்கக் கூற்று என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரச நிதி மற்றும் நிர்வாக பிரமாணங்களுக்கு இணங்க பேணப்பட்டு வருதல், தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற கணக்குகள் மற்றும், இணைக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமான முறையில் சமர்ப்பிக்கப்படுவதற்கு உரியவகையிலான

உள்ளகக்கட்டுப்பாடுகளைத் தயாரித்தல், செயற்படுத்தல் மற்றும் பராமரித்தலும் இப் பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

## 1.3 கணக்காய்வு அவதானிப்புகள்

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதியறிக்கைகள் மற்றும் புத்தகங்களின் பிரகாரம், நீர்ப்பாசன, நீர்வளங்கள் முகாமைத்துவ அமைச்சின் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்று, இதன் (அ) முதல் (எ) வரை காண்பிக்கப்பட்டுள்ள பொது அவதானிப்புக்கள் மற்றும் 1.4 முதல் 1.10 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புகள் தவிர திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளதாக அவதானிக்கப்பட்டது.

### (அ) புத்தகங்களும் பதிவேடுகளும் பேணப்படாமை

அமைச்சால் பின்வரும் புத்தகங்கள் பேணப்பட்டிராததுடன் சில பதிவேடுகள் முறையாகவும் நாளதுவரையாகவும் பேணப்பட்டிராமை தெரிவுக் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

| பதிவேட்டின் வகை | உரிய விதிகள் |
|---|---|
| செலவினப் பேரேடு | நிதிப் பிரமாணம் 156(5) மற்றும் 447 (2) |
| காசேடு | நிதிப் பிரமாணம் 156(5) |
| நட்டங்கள் தொடர்பான பேரேடு | நிதிப் பிரமாணம் 110 |

### (இ) கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

வாவிகளின் சேற்றை அகற்றும் செயற்பாட்டிற்காக இலங்கை மஹாவெலி அதிகாரசபையால் ஏற்கப்பட்ட செலவினமாகக் குறிப்பிட்டு மஹாவலி அதிகாரசபைக்கு ரூபா 84,941,778 தொகை மீளாய்வாண்டின் போது மீளளிக்கப்பட்டிருந்தது. அச் செலவினங்களுக்கு உரித்தான பட்டியல்களும் கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்களும் அமைச்சால் பெற்றுக்கொள்ளப்பட்டிராமையால் அச் செலவினங்கள் கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்தப்பட முடியாதிருந்தது. எவ்வாறெனினும்,

நிராவிய பண்ணைக்கும் தம்புத்தேகம பண்ணைக்கும் உரித்தாக மேற்கொள்ளப்பட்டிருந்த முறையே ரூபா 156,896 தொகையும், ரூபா 1,387,782 தொகையும் அச் செலவினத்தில் உள்ளடக்கப்பட்டிருந்தது. ஆகையால் மீளளிக்கப்பட்ட மொத்தச் செலவினமும் வாவிகளின் சேற்றை அகற்றுவதற்காக மாத்திரமே பயன்படுத்தப்பட்டிருந்ததை உறுதிப்படுத்த முடியாதிருந்தது.

**(இ) கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதிலளித்தல்**

அமைச்சிற்கு மீளாய்வாண்டின் போது சமர்ப்பிக்கப்பட்ட 11 கணக்காய்வு ஐயவினாக்களுக்கும் முன்னைய ஆண்டுகளின் போது விநியோகிக்கப்பட்ட 05 கணக்காய்வு ஐயவினாக்களுக்கும் 2014 மார்ச் 31 ஆம் திகதி வரையிலும் பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஈ) பாதீட்டு முரண்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 03 செலவின விடயங்களுக்காகச் செலவிடப்பட்டிருந்த ரூபா 2,045,000,000 தொகையான மொத்த தேறிய ஏற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தது.

(ii) 14 செலவின விடயங்களுக்காக மிகை ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த காரணத்தால் ஏற்பாடு பயன்படுத்தப்பட்டதை அடுத்துள்ள சேமிப்பு அச் செலவின விடயங்களுக்குரித்தான தேறிய ஏற்பாட்டில் 26 சதவீதத்திலிருந்து 93 சதவீதம் வரையான வீச்சளவைக் கொண்டிருந்தது.

**(உ) கட்டுநிதிக் கணக்குகள்**

உமா ஓயா பல்நோக்கு அபிவிருத்திச் செயற்திட்டத்திலிருந்து ரூபா 60,500,000 தொகையான கட்டுநிதி மீளாய்வாண்டின் போது பண்டாரவளை நீர்ப்பாசனப் பணிப்பாளருக்கு விடுவிக்கப்பட்டிருந்தது. உமாஓயா பல்நோக்கு அபிவிருத்திச் செயற்திட்டத்தின் 2013 ஆம் ஆண்டின் கணக்குகள் அறிக்கையின் படி அக் கட்டுநிதி முற்றாகப் பயன்படுத்தப்பட்டிருந்த போதிலும் பண்டாரவளை நீர்ப்பாசனப் பணிப்பாளர் அலுவலகத் தகவல்களின் படி அச் செலவினம் ரூபா 588,962 அதிகமாக அதாவது ரூபா 61,088,962 ஆக இருந்தது. கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்களின் படி அச் செலவினம் ரூபா 58,348,499 ஆக இருந்தது. அதன் படி ரூபா 2,151,501

தொகையான வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. அதன் படி, ஒவ்வொரு அறிக்கைகளின் படி, வேறுபாடு ஏற்பட்டிருந்தும் அது தொடர்பாக இணக்கம் செய்யப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

**(ஊ) பொது வைப்புக் கணக்கு**

அமைச்சின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வைப்புக் கணக்குகளின் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 31,554,475 ஆகக் காணப்பட்டது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2 ஆண்டுகள் கடந்திருந்த ரூபா 38,935 தொகையான 04 வைப்புகள் தொடர்பாக நிதிப் பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) அமைச்சின் புத்தகங்கள் மற்றும் திறைசேரிக் குறிப்புகளின் படி 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பொது வைப்புக் கணக்கின் ரூபா 501,853 தொகையான இணக்கம் செய்யப்படாத வேறுபாடுகளும் அவதானிக்கப்பட்டன.

**(எ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக் கூற்று**

15201 ஆம் விடய இலக்க முற்பணக் கணக்கு தொடர்பான 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக் கூற்றின் படி, அன்றைய தினத்தில் உள்ளவாறு அறவீடுகள் நிலுவையாகக் காணப்பட்ட மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 1,387,400 தொகையானதுடன் அந் நிலுவை மீதிகளின் அறவீடுகளின் பின்தொடர் நடவடிக்கைகள் நலிவான நிலையில் காணப்பட்டன.

## 1.4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

**கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு செயற்படுத்தப்படல்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) அமைச்சால் மீளாய்வாண்டிற்காக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் 3 தடவைகள் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தன.

(ii) கணக்காய்வு ஐயவினாக்களின் மூலம் காண்பிக்கப்பட்ட குறைபாடுகள், முறைகேடுகள் மற்றும் விதிகளுக்கு இணங்கியிராமைகளைத் தவிர்ப்பதற்காக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் மூலம் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 1.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

அமைச்சின் சொத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது கண்டறியப்பட்ட குறைபாடுகள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

### (அ) விளைவற்றதும் குறைவான பயன்பாடுடையதுமான சொத்துக்கள்

அமைச்சிற்குச் சொந்தமான சில சொத்துக்கள் விளைவற்று அல்லது குறைப் பயன்பாடுடையதாகக் காணப்பட்டமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டன. விபரம் கீழே காட்டப்பட்டுள்ளது.

(i) பழுதுபார்ப்பிற்காக 2013 ஆம் ஆண்டு வரையில் 15 வாகனங்கள் மடாட்டுகம இயந்திர வேலைத்தளத்திற்குக் கொண்டு செல்லப்பட்டிருந்த போதிலும் அவை பழுதுபார்க்கப்பட முடியாத நிலையில் காணப்பட்டமையால் அங்கு நிறுத்திவைக்கப்பட்டிருந்தது. இவ் வாகனங்கள் கைதவிர்க்கப்படுவதற்கு அமைச்சு 2013 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் எவ்வித நடவடிக்கைகளும் எடுத்திருக்கவில்லை.

(ii) மஹாவலி அதிகாரசபைக்கு உரித்தான 30 ஆண்டுகள் வரை பழைமை வாய்ந்த ஓட்டத்திலிருந்து அகற்றப்பட்ட ஜீப் வண்டி ஒன்று 2013 செப்தெம்பர் 16 ஆம் திகதி மடாட்டுகம இயந்திர வேலைத்தளத்திற்கு பழுதுபார்த்தலுக்காகவும் பூச்சிடப்படுவதற்காகவும் ஒப்படைக்கப்பட்டிருந்தது. அவ் வாகனத்தின் பழுதுபார்த்தல் நடவடிக்கைகள் 2014 மே 21 ஆம் திகதி வரையிலும் பூர்த்திசெய்யப்பட்டிருக்கவில்லை.

(iii) 2012 ஆம் ஆண்டின் போது ஏழைகளுக்கு ஆதரவான பொருளாதார முன்னேற்ற மற்றும் சமுதாய விரிவாக்கல் (PEACE) செயற்திட்ட நிதியத்தின் ரூபா 8,513,972 தொகை செலவிட்டு நிராவிய பண்ணையில் 05 கோழிக்கூடுகள் நிர்மாணிக்கப்பட்டிருந்த போதிலும் இவை பயன்பாட்டிற்கு எடுக்கப்படாத காரணத்தால் பற்றைகள் உருவாகி பயனிழந்து காணப்பட்டன.

**(ஆ) வருடாந்த பொருள் மெய்மையாய்வு நடாத்தப்படல்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மீளாய்வாண்டிற்காக அமைச்சால் வருடாந்த பொருள் மெய்மையாய்வு அறிக்கை 2014 ஏப்ரல் 01 ஆம் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

- நீர்ப்பாசன முகாமைத்துவப் பிரிவு, உமாஓய செயற்திட்டம், மொறகஹகந்த செயற்திட்டம், ஏழைகளுக்கு ஆதரவான பொருளாதார முன்னேற்ற மற்றும் சமுதாய விரிவாக்கல் செயற்திட்டம் (PEACE) மற்றும் முருங்கன் வதிவிட பொறியியலாளர் அலுவலகம் போன்ற செயற்திட்டங்களினதும் அலுவலகச் சொத்துக்களினதும் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

- 05 இயந்திர வேலைத்தளங்களினதும், 5 பண்ணைகளினதும், கொத்மலை பயிற்சி நிறுவகத்தின் பொருட் பதிவுப் பொருள், இருப்பு, உதிரிப் பாகங்கள், ஆயுதங்கள் மற்றும் உதிரிப்பாகங்கள், காரியாலய உபகரணங்கள், இயந்திர உபகரணங்கள், வாகனங்கள், மிருகங்கள் முதலியவை மெய்மையாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ii) 2012 ஆம் ஆண்டிற்கு உரித்தான மெய்மையாய்வுச் சபை அறிக்கையின் மூலம் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரை தொடர்பாக நிதிப் பிரமாண ஏற்பாடுகளின் படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) அமைச்சால் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 967,996,000 பெறுமதியான இயந்திரங்கள், 80 இயந்திர உபகரணங்களும் வாகனங்களும் மெய்மையாய்வு செய்யப்படாது அச் சொத்துக்களுக்குப் பொறுப்பாகச் செயற்பட்ட மடாட்டுகம மற்றும் தம்புத்தேகம வேலைத்தளங்கள் இரண்டின் உத்தியோகத்தர்களிடமிருந்து தொலைநகல் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த பட்டோலைகள் மெய்மையாய்வுச் சபை அறிக்கையாக சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. இச் சொத்துக்கள் 2013 இன் ஒதுக்கீட்டுக் கணக்கில் நடைமுறையற்ற சொத்துக்கள் அசைவு அறிக்கையில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

**(இ) வெளித்தரப்பினருக்கு வழங்கப்பட்டுள்ள சொத்துக்கள்**

நீர்ப்பாசன மற்றும் நீரியல் வள முகாமைத்துவ அமைச்சால் சில சொத்துக்கள் வெளித்தரப்பினருக்கு விடுவிக்கப்பட்டிருந்த சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. விபரம் கீழே காட்டப்படுகின்றது.

| | சொத்துக்களின் வகை | சொத்துக்களின் எண்ணிக்கை/ அலகுகளின் எண்ணிக்கை/ அளவு | சொத்துக்கள் வழங்கப்பட்டுள்ள நிறுவகம் | பெறுமதி | காலப்பகுதி |
|---|---|---|---|---|---|
| | | | | ரூபா | |
| (i) | மோட்டார் வாகனம் | 07 | நீர்ப்பாசனத் திணைக்களம் | தகவல்கள் இல்லை | 2010 முதல் |
| | | 01 | தபால் அமைச்சு | மேற்படி | மேற்படி |
| | | 03 | வனசீவராசிகள் மற்றும் கமநல சேவைகள் அமைச்சு | மேற்படி | மேற்படி |
| | | 01 | மத்திய | மேற்படி | மேற்படி |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | பொறியியல் உசாத்துணைப் பணியகம் | | |
| | | 02 | மஹாவலி அதிகாரசபை | மேற்படி | மேற்படி |
| (ii) | இயந்திர உபகரணங்கள் | 01 | மடாட்டுகம/ தம்புத்தேகம இயந்திர வேலைத்தளம் | மேற்படி | மேற்படி |
| | | 11 | தெதுரு ஓயா செயற்திட்டம் | மேற்படி | மேற்படி |
| | | 15 | நீர்ப்பாசனப் பொறியியல் அலுவலகம் | மேற்படி | மேற்படி |
| | | 05 | வலய நீர்ப்பாசன பணிப்பாளர் அலுவலகம் | மேற்படி | மேற்படி |
| | | 01 | நிராவிய பண்ணை | மேற்படி | மேற்படி |
| | | 03 | உமா ஓயா செயற்திட்டம் | மேற்படி | மேற்படி |
| | | 02 | வலயச் செயற்திட்ட முகாமைத்துவ அலுவலகம் | மேற்படி | மேற்படி |
| | | 02 | வடக்கு வசந்தம் | மேற்படி | மேற்படி |
| (iii) | இயந்திரம் | 04 | நீர்ப்பாசனத் | மேற்படி | 2013 ஆம் ஆண்டு |

(வெல்டிங் டிரான்ஸ்போமர் இயந்திரம்) திணைக்களம்

(ஈ) தீர்க்கப்படாத பொறுப்புகள்

அமைச்சால் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தீர்க்கப்படாத பொறுப்புகள் ரூபா 99,318,935 தொகையானதுடன் அம் மீதி ஒரு வருடத்திற்கும் குறைவான காலப்பகுதிக்கு உரித்தானதாகக் காணப்பட்டது.

## 1.6 இணக்கமின்மைகள்

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் முதலியவற்றுடன் இணக்கமின்மைகள்**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்கியிராத சந்தர்ப்பங்கள் கீழே விபரித்துக் காண்பிக்கப்பட்டுள்ளது.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணக்கமின்மைகள் |
|---|---|---|---|
| | | ரூபா | |
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் | | |
| (i) | நிதிப் பிரமாணம் 139(4) மற்றும் நிதிப் பிரமாணம் 264(1) | 76,201,103 | உமா ஒயா பல்நோக்கு அபிவிருத்தி செயற்திட்டத்தின் கொடுப்பனவிற்காக உறுதிச்சீட்டுக்களில் குறிப்பிடப்பட்ட தொகை பெற்றுக்கொள்ளப்பட்டதாக பெறுனரின் பற்றுச்சீட்டுக்களின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (ii) | நிதிப் பிரமாணம் 237(ஆ) | 2,143,995 | அமைச்சின் தலைமைக் காரியாலயத்தின் மூலம் கொள்வனவு செய்யப்பட்டிருந்த 02 மரவள்ளிக் கிழங்கு சீவும் இயந்திரங்கள், 04 வெல்டிங் டிரான்ஸ்போர்மர்கள் மற்றும் உமா ஒயா பல்நோக்கு திட்டத்தின் மூலம் கொள்வனவு செய்யப்பட்டிருந்த காரியாலய உபகரண இருப்புக்கள் என்பன இருப்புப் பதிவேட்டிற்கு உள்ளடக்கப்பட்டதற்கான சான்று, கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்களில் இணைக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iii) | நிதிப் பிரமாணம் 272(3) | 751,357 | மொறகஹகந்த செயற்திட்ட அலுவலகத்தினால் மீளாய்வாண்டின் போது மேற்கொள்ளப்பட்டிருந்த கொடுப்பனவுகளுக்கு உரித்தான உறுதிச்சீட்டுக்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

## 1.7 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

அமைச்சால் மேற்கொள்ளப்பட்டிருந்த சில கொடுக்கல் வாங்கல்கள் சர்ச்சைக்குரிய தன்மையிலானவையாகக் காணப்பட்டன. தெரிவுப் பரிசோதனைகளின் போது கண்டறியப்பட்ட அத்தகைய சில கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான விபரங்கள் பின்வருமாறாகக் காணப்பட்டன.

(i) குழாய்க்கிணறு நிர்மாணிப்பு, நிலக்கீழ் நீர் ஆய்வு, நீரின் தரம் குறித்த பரிசோதனை மற்றும் தேசத்திற்கு மகுடம் நிகழ்ச்சித்திட்டச் செலவினத்தை ஏற்பதற்காக நீர் வளச் சபைக்கு 10 சந்தர்ப்பங்களின் போது வழங்கப்பட்டிருந்த ரூபா 12,341,651 முற்பணம், பற்றுச்சீட்டுக்கள் மற்றும் கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்களால் கொடுப்பனவு

உறுதிப்படுத்தப்படாது நீர் வளங்கள் சபை சமர்ப்பித்த விலைப் பட்டியல்களை மாத்திரம் பெற்று அம் முற்பணம் தீர்க்கப்பட்டிருந்தது.

(ii) ஏழைகளுக்கு ஆதரவான பொருளாதார முன்னேற்ற மற்றும் சமுதாய விரிவாக்கல் செயற்திட்டம் (PEACE) 2013 இன் முதல் அரையாண்டின் போது ரூபா 2,352,000 பெறுமதியான மின்பிறப்பாக்கியும், ரூபா 22,780,500 பெறுமதியான 06 நீர் பவுசர்களும் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் அக் கொள்வனவுகளின் நோக்கம் கணக்காய்விற்குத் தெளிவாக்கப்பட்டிருக்கவில்லை. இச் சொத்துக்களில் மின்பிறப்பாக்கி இலங்கை மஹாவலி அதிகாரசபையின் கீழான நிராவி பண்ணைக்கு ஒப்படைக்கப்பட்டிருந்ததுடன் 06 நீர் பவுசர்களும் அவ் அதிகாரசபையின் கீழ் மடாட்டுகம இயந்திர வேலைத்தளத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது.

(iii) ஏழைகளுக்கு ஆதரவான பொருளாதார முன்னேற்ற மற்றும் சமுதாய விரிவாக்கல் செயற்திட்டம் (PEACE) உடன்படிக்கைக் காலம் பூர்த்தியடைந்ததை அடுத்து அதாவது 2013 இரண்டாம் அரையாண்டின் போது அச் செயற்திட்டத்தின் கீழ் ரூபா 7,300,000 தொகை செலவிடப்பட்டு நிராவிய பண்ணைக்காக குளிரூட்டலுடன் புஸோ வகையிலான கப் வண்டியொன்றும், ரூபா 15,675,310 தொகை செலவிட்டு பால் சார்ந்த உற்பத்திப் பதனீட்டுப் பிரிவொன்றிற்குத் தேவையான இயந்திரங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. மேலும், ரூபா 1,973,876 தொகை செலவிட்டு நிராவிய பண்ணையின் பால் உற்பத்திப் பிரிவு பழுதுபார்ப்பட்டிருந்தது. இலங்கை மஹாவலி அதிகாரசபையின் கீழ் உள்ள நிராவிய பண்ணை ஏழைகளுக்கு ஆதரவான பொருளாதார முன்னேற்ற மற்றும் சமுதாய விரிவாக்கல் (PEACE) செயற்திட்டத்திற்கு எவ்வித தொடர்பும் இன்மையால் இதற்காக செயற்திட்டச் செலவினம் ஏற்பது சர்ச்சைக்குரிய தன்மையிலானதாகக் காணப்பட்டது.

(iv) வாவிகளினதும் நீர்ப்பாசன முறைமைகளினதும் பராமரிப்பு மற்றும் புனரமைப்பு நீர்ப்பாசனத் திணைக்களத்தின் மூலம் மேற்கொள்ளப்படுவதனால் இதற்காக மேற்கொள்ளப்படும் ஏற்பாடு நீர்ப்பாசனத் திணைக்களத்தின் கீழ் கருத்திற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் பிரதான மற்றும் மத்திய நீர்ப்பாசனத் திட்டப் புனரமைப்பிற்காக ரூபா 1,525 மில்லியன் தொகையான ஏற்பாடு அமைச்சின் செலவினத் தலைப்பின் கீழ் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இவ் ஏற்பாடு மேற்கொள்ளப்படுகையில் அமைச்சு இதற்காக ஓர் மதிப்பீடொன்றைத் தயாரிக்காதிருந்தமையும் மேலும் அவதானிக்கப்பட்டது.

(v) அமைச்சின் கீழ் வலவ கந்தகெட்டிய எனும் பெயரில் பண்ணை நிலவுவது கணக்காய்விற்கு அறிவிக்கப்பட்டிருக்கவில்லை அப் பண்ணைக்கும் மஹவெலி அதிகாரசபையின் கீழ் நிலவும் நிராவிய பண்ணைக்கும் அமைச்சின் நிதியத்திலிருந்து ரூபா 64,229 தொகை செலவிடப்பட்டு மரவள்ளிக் கிழங்கு சீவல் இயந்திரங்கள் 02 உம் வழங்கப்பட்டிருந்தன.

## 1.8 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

----------------------------------------------------------

அமைச்சால் ஏற்படுத்தப்பட்டிருந்த சில கொடுக்கல் வாங்கல்கள் முறையற்றவையாகக் காணப்பட்டன. அவதானிக்கப்பட்ட அத்தகைய சந்தர்ப்பங்கள் சில பின்வருமாறாகும்.

(அ) அமைச்சின் கண்காணிப்பின் கீழ் செயற்படும் வாவிகளில் சேற்றை அகற்றும் செயற்திட்டத்திற்காக ஈடுபடுத்தப்பட்டிருந்த இயந்திர உபகரணங்களின் சேவைப் பட்டியல்கள் தீர்க்கப்படுவதற்காக உள்நாட்டு முகவர் நிறுவகங்களுக்குச் செலுத்தப்படுவதற்கு, மொறகஹகந்த செயற்திட்ட ஏற்பாடுகளில் ரூபா 2,835,177 தொகை மஹாவெலி அதிகாரசபையின் ஆறுகள் முகாமைத்துவப் பிரிவின் பணிப்பாளருக்கு வழங்கப்பட்டிருந்தது. மொறகஹகந்த செயற்திட்ட நிதியம் இதற்காகப் பயன்படுத்தப்படுவது முறையற்ற செயற்பாடாகக் காணப்பட்டது.

(ஆ) பிரதான மற்றும் மத்திய நீர்ப்பாசனத்திட்டங்களின் புனரமைப்பிற்காக ஒதுக்கப்பட்ட ஏற்பாடுகளில் அந் நிகழ்ச்சித்திட்டத்திற்கு உரித்தற்ற இயந்திர உபகரணங்களின் கொள்வனவு, நுட்பமான நீர் விநியோக முறைமை (Micro Irrigation System) கொள்வனவு, கட்டிடப் பழுதுபார்த்தல்கள், வாகனப் பழுதுபார்த்தல், நிராவிய பண்ணையின் ஊழியர் சம்பளக் கொடுப்பனவு, கொத்மலை சர்வதேச பயிற்சி நிறுவகத்தின் பராமரிப்பு செலவினத்தை ஏற்றல் போன்ற நடவடிக்கைகளுக்காக ரூபா 130,873,403 தொகை செலவிடப்பட்டிருந்தது.

(இ) இலங்கை மஹாவலி அதிகாரசபையின் கீழ் காணப்படுகின்ற நிராவிய பண்ணை, மடாட்டுகம இயந்திரப் பொறியியலாளர் வேலைத்தளம் மற்றும் தம்புத்தேகம இயந்திர வேலைத்தளம் என்பவற்றின் பதவியணிச்

சம்பளக் கொடுப்பனவு உள்ளடங்கலாக ஏனைய செலவினங்களுக்காக மொறகஹகந்த களுகங்கை அபிவிருத்திச் செயற்திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட ஏற்பாட்டில் ரூபா 103,309,125 தொகை இலங்கை மஹாவலி அதிகாரசபைக்குச் செலுத்தப்பட்டிருந்தது.

(ஈ) வருடாந்த மதிப்பீட்டில் சாத்தியவளக் கற்கைக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஏற்பாடுகளில் ரூபா 12,422,667 தொகை செலவிடப்பட்டு வாகனப் பழுதுபார்த்தல், தொலைபேசிப் பட்டியல்கள் தீர்க்கப்படல், குடிநீர்ப் போத்தல்கள் கொள்வனவு, அலுவலக உபகரணங்களின் கொள்வனவு, கட்டிட வாடகை செலுத்துதல், பத்திரிகை விளம்பரப்படுத்தல், வீதவரிக் கொடுப்பனவு மற்றும் உத்தியோகத்தர்களின் பாடநெறிக் கட்டணத் தீர்ப்பனவு என்பன மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(உ) 2012 ஆம் ஆண்டின் போது அமைச்சால் இராஜாங்கனை, நிராவிய மற்றும் மொறகஹகந்த பண்ணைகளில் நுட்ப நீர்ப்பாசன முறையை ஸ்தாபிப்பதற்காக ரூபா 71,750,000 தொகையான 03 நிர்மாணிப்பு ஒப்பந்தங்கள் மஹாவெலி ஆலோசனைச் சேவைப் பணியகம் (தனியார்) கம்பனிக்கு கொள்வனவு நடைமுறைக்கு மாறாக ஒப்படைக்கப்பட்டிருந்தது.

## 1.9 முகாமைத்துவ நலிவுகள்

--------------------------------------------

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் நலிவுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2012 ஆம் ஆண்டின் போது வறட்சியால் பாதிப்பிற்குள்ளான மக்களுக்கு உதவியளிக்கும் செயற்திட்டத்தின் கீழ் நீர்த்தேக்கங்களிலும் வாவிகளிலும் சேற்றை அகற்றும் செயற்பாட்டில் ஈடுபடுத்தப்படுவதற்காக கொள்வனவு செய்யப்பட்ட எஸ்கவேட்டர், பெக்கோலோடர், வைபிரேட்டர் போன்ற 80 இயந்திர உபகரணங்களின் இருப்பு அச் செயற்பாடு முடிவுற்றதையடுத்து அமைச்சின் செயற்திட்டப் பணிகளில் ஈடுபடுத்தப்படும் இயலுமை இருக்கையில் இது தொடர்பாக கவனம் செலுத்தாது மீளாய்வாண்டின் போது ரூபா 7,250,200 தொகையான கிரயம் ஏற்றுக்கொள்ளப்பட்டு வாடகை அடிப்படையில் முருங்கன் பிரதான வதிவிடப் பொறியியலாளர் அலுவலகத்திற்காக இயந்திர உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

(ஆ) உமா ஓயா பல்நோக்கு அபிவிருத்திச் செயற்திட்டத்திற்காக பிரதான பொறியியலாளர் அலுவலகத்திற்கு வழங்கப்பட்டிருந்த முற்பணத்தில் ரூபா 751,357 தொகை இலங்கை மஹாவெலி அதிகாரசபைக்கு உரித்தான தம்புத்தேகம இயந்திர வேலைத்தளத்தின் இயந்திர இயக்குனரினதும் உதவியாளர்களினதும் சம்பளம் வழங்கப்படுவதற்காகச் செலவிடப்பட்டிருந்தது.

(இ) அத்தியாவசிய, மிக அவசரமான, பிற்போடப்பட இயலாத போன்ற காரணங்களைக் குறிப்பிட்டு மீளாய்வாண்டின் போது நிதிப் பிரமாணம் 66 இன் கீழ் 08 சந்தர்ப்பங்களின் போது செலவின விடயங்களுக்காக ஏற்பாடு மாற்றப்பட்டிருந்தது. அவ்வாறு மாற்றப்பட்டிருந்த அவ் ஏற்பாடுகளில் ரூபா 584,946,482 கூட்டுத்தொகை மீளாய்வாண்டின் போது பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 1.10 மனிதவள முகாமைத்துவம்

(அ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியும் உள்ளபடியான பதவியணியும்

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பதவியணி தொடர்பான நிலை பின்வருமாறாகக் காணப்பட்டது.

| | பதவியணி வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணி | உள்ளபடியான பதவியணி | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 41 | 33 | 08 |
| (ii) | மூன்றாம் நிலை | 50 | 41 | 09 |
| (iii) | இரண்டாம் நிலை | 227 | 165 | 62 |
| (iv) | ஆரம்ப நிலை | 127 | 124 | 03 |
| | மொத்தம் | 445 | 363 | 82 |

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நிலவிய 82 வெற்றிடங்களை நிரப்புவதற்காக அமைச்சால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 445 என கணக்காய்வின் போது உறுதிப்படுத்தப்பட்டிருந்த போதிலும் 2013 ஆம் ஆண்டின் வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டின் படி இது 291 ஆகக் காணப்பட்டது. அதன் படி வேறுபாடான 154 இற்கான காரணம் விளக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) அமைச்சின் நேரடியான கண்கசாணிப்பின் கீழ் உள்ள நிராவிய பண்ணை, குருவெல பண்ணை, தம்புத்தேகம இயந்திர வேலைத்தளம், மடாட்டுகம இயந்திர வேலைத்தளம், கொத்மலை நீர்ப்பாசன மற்றும் நீர் முகாமைத்துவம் தொடர்பான சர்வதேச பயிற்சி நிறுவகம், உமா ஓயா பல்நோக்கு அபிவிருத்திச் செயற்திட்டம், மொறகஹகந்த களுகங்கை செயற்திட்டம் ஆகிய நிறுவகங்களின் தற்காலிக, அமைய மற்றும் ஒப்பந்த அடிப்படையில் ஈடுபடுத்தப்படுவதற்காக சேர்க்கப்பட்டிருந்த போதிலும் அவ் ஊழியர்கள் தொடர்பான விபரமான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படுவதற்கு அமைச்சு தவறியிருந்தது. கடந்த ஆண்டின் போது அத்தகைய 806 ஊழியர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

**(ஆ) முறையற்ற விதத்தில் வேறு தரப்பினருக்கு விடுவிக்கப்பட்ட மனிதவளங்கள்**

---

அமைச்சால் 2011 ஆம் 2012 ஆம் ஆண்டுகளின் போது இலங்கை மஹாவலி அதிகாரசபைக்கு (மஹாவலி கேந்திர நிலையம்) சாரதிகள் இருவர் முறையற்ற விதத்தில் விடுவிக்கப்பட்டிருந்தமையும் அவதானிக்கப்பட்டது.

**(இ) வேறு தரப்பினர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த மனிதவளங்கள்**

---

அமைச்சால் வேறு தரப்பினரிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட மனிதவளங்கள் தொடர்பான விபரம் பின்வருமாறாகக் காணப்பட்டது.

| ஊழியர் வகை | எண்ணிக்கை | ஏனைய தரப்பினர் | காலப்பகுதி |
|---|---|---|---|
| சாரதி | 09 | சுகாதார அமைச்சு | 2010 ஆம் ஆண்டு முதல் |
| தொழிலாளர் | 03 | சுகாதார அமைச்சு | 2010 ஆம் ஆண்டு முதல் |

## 2. தலைப்பு 282 – நீர்ப்பாசனத் திணைக்களம்

### 2.1 கணக்காய்வின் நோக்கெல்லை

நீர்ப்பாசனத் திணைக்களத்தின் 2013 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கை, இணக்கக் கூற்றுக்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் உள்ளடக்கப்பட்ட ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையில் உள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2015 சனவரி 12 ஆம் திகதி நீர்ப்பாசனப் பணிப்பாளர் நாயகத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள், கருத்துரைகள், மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களின் மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகளது, போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு உள்ளடக்கத்தினை கொண்டு காணப்படுகின்றது.

### 2.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்

ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக் கூற்று என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரச நிதி மற்றும் நிர்வாக பிரமாணங்களுக்கு இணங்க பேணப்பட்டு வருதல், தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

மோசடி அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற கணக்குகள் மற்றும், இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமான முறையில் சமர்ப்பிக்கப்படுவதற்கு உரியவகையிலான உள்ளகக்கட்டுப்பாடுகளைத் தயாரித்தல், செயற்படுத்தல் மற்றும் பராமரித்தலும் இப் பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

**2.3 கணக்காய்வு அவதானிப்புகள்**

---

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதியறிக்கைகள் மற்றும் புத்தகங்களின் பிரகாரம், நீர்ப்பாசனத் திணைக்களத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்று, இதன் (அ) முதல் (உ) வரை காண்பிக்கப்பட்டுள்ள பொது அவதானிப்புக்கள் மற்றும் 2.4 முதல் 2.15 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புகள் தவிர திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளதாக அவதானிக்கப்பட்டது.

**(அ) கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை**

---

நிதிப் பிரமாணம் 272(2) இன் படி, செயற்பாடுகள் பூர்த்திசெய்யப்படாது 2011 ஆம் 2012 ஆம் ஆண்டுகளுக்கு உரித்தான ரூபா 735,042 பெறுமதியான 4 கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் காணாமற் போயிருந்தன.

**(ஆ) கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதிலளித்தல்**

---

திணைக்களத்திற்கு மீளாய்வாண்டின் போது சமர்ப்பிக்கப்பட்ட 10 கணக்காய்வு ஐயவினாக்களுக்கு 2014 மார்ச் 31 ஆம் திகதி வரையிலும் பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை.

**(இ) பாதீட்டு முரண்கள்**

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 04 பாதீட்டு விடயங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 29,755,904 தொகையான மொத்த தேறிய ஏற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தது.

(ii) 36 செலவின விடயங்களுக்காக மிகை ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த காரணத்தால் ஏற்பாடு பயன்படுத்தப்பட்டதை அடுத்துள்ள சேமிப்பு அச்

செலவின விடயங்களுக்குரிய தேறிய ஏற்பாட்டின் 5 சதவீதத்திலிருந்து 100 சதவீதம் வரையான வீச்சளவைக் கொண்டிருந்தது.

**(ஈ) பொது வைப்புக் கணக்கு**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 02 ஆண்டுகள் கடந்திருந்த ரூபா 53,769,297 தொகையான வைப்புகள் தொடர்பாக நிதிப் பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) நிதிப் பிரமாணம் 571 (1) இன் பிரகாரம் ஒவ்வொரு அரையாண்டின் இறுதியிலும் முன்னைய சகல வைப்புக்கள் தொடர்பான ஓர் பட்டியல் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**(உ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 28201 ஆம் விடய இலக்க முற்பணக் கணக்குகள் தொடர்பான 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக் கூற்றுக்களின் பிரகாரம் அன்றைய தினத்தில் அறவீடுகள் நிலுவையாகக் காணப்பட்ட மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 18,258,380 ஆகக் காணப்பட்டதுடன் அந் நிலுவை மீதிகளை அறவிடுவதிலான பின்தொடர் நடவடிக்கைகள் நலிவான நிலையில் காணப்பட்டது.

(ii) இடமாற்றம் பெற்றுச்சென்ற 07 உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 637,050 தொகையான பணம் அறவிடப்பட வேண்டிய நிலையில் காணப்பட்டது. 2010 ஆம் 2011 ஆம் ஆண்டுகளின் போது மாகாண சபைக் காரியாலயங்களுக்கு மாற்றலாகிச் சென்ற இரு உத்தியோகத்தர்களின் கடன் தொகை தவணை முறையில் அறவிடப்படுவதுடன் ரூபா 180,920 தொகையான பணம் மேலும் அறவிடப்பட வேண்டியிருந்தது.

(iii) சம்பளமற்ற லீவில் வெளிநாட்டிற்குச் சென்றிருந்த 3 உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 151,615 தொகை அறவிடப்பட

வேண்டியிருந்ததுடன் இவர்களில் இரு உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 146,240 தொகையான பணம் 18 ஆண்டு காலத்திலிருந்தும் ஒரு உத்தியோகத்தரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 5,375 தொகை 12 ஆண்டுகளாகவும் நிலுவையாகக் காணப்பட்டது. இரு உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 32,172 தொகையான இடர் கடன் தொகை நிதிப் பிரமாணம் 113 இன் படி புத்தகங்களிலிருந்து பதிவழிக்கப்படுவதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக கடந்த ஆண்டு அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அம் மீதி பதிவழிக்கப்படுவதற்கோ அல்லது தீர்க்கப்படுவதற்கோ திணைக்களம் தவறியிருந்தது.

(iv) 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் இறந்த மற்றும் ஓய்வுபெற்ற 186 உத்தியோகத்தர்கள்/ ஊழியர்களிடமிருந்து ரூபா 15,147,328 தொகையான கடன் மீதி நிலுவையாக இருந்தது. அந்தக் கடன் மீதியில் 19 ஆண்டுகள் முதல் நிலுவையாகக் கொண்டுவரப்படுகின்ற பழைய மீதியாகிய கடன் மீதிகள் தீர்க்கப்படுவதற்குரிய ஓய்வூதியச் சம்பளப் பணிக்கொடை போதாமை, ஓய்வூதியக் கோவைகளில் குறைபாட்டினால் ஓய்வூதியங்கள் தயாரிக்கப்படுவதற்கு முடியாதிருந்தமை, அரசாங்க விடுதிகள் ஒப்படைக்கப்பட்டிராமை, ஒழுக்காற்று விசாரணைகள் பூர்த்திசெய்யப்பட்டிராமை போன்ற திணைக்களத்தின் நிர்வாகச் சீர்கேடுகள் காரணமாக இம் மீதி தீர்க்கப்படுவதில் தாமதம் ஏற்பட்டிருந்தது. கடந்த ஆண்டின் கணக்காய்வு அறிக்கையின் மூலமும் இந் நிலை குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் கடன் மீதி தீர்க்கப்படுவதன் முன்னேற்றம் தொடர்பாக கணக்காய்வின் போது திருப்திகொள்ள முடியாதிருந்தது.

(v) வேலை நீக்கத்திற்கு உட்பட்டிருந்த 12 உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 519,775 தொகையான கடன் மீதி அறவிடப்பட வேண்டியிருந்ததுடன் அக் கடன் மீதியில் 21 ஆண்டுகள் முதல் கொண்டுவரப்படுகின்ற பழைமை வாய்ந்த கடன் மீதிகளும் காணப்பட்டன. வேலை நீக்கத்திற்கு உட்பட்ட காரணத்தை இனங்கண்டு அவ் உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய கடன் மீதியை அறவிட்டுக்கொள்வதற்கு திணைக்களம் செயற்பட்டிராமையால் இக் கடன் மீதி நீண்டகாலமாக நிலுவையாகக் காணப்பட்டது.

(vi) வேலையை விட்டுச் சென்ற 36 உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 1,802,612 தொகையான கடன் மீதி அறவிடப்பட வேண்டியதாகக்

காணப்பட்டது. அந்தக் கடன் மீதி 18 ஆண்டுகாலமாக அறவிடப்படாது காணப்பட்ட கடன் மீதியாக நிலவியமை அவதானிக்கப்பட்டது. இக் கடனாளிகளிடமிருந்து அறவிடப்பட வேண்டியிருந்த கடன் மீதிகள் அவர்களின் ஆதனங்களிலிருந்து, பிணையாளிகளிடமிருந்து அல்லது உரித்தாளர்களிடமிருந்து அறவிடப்படுவதற்கு திணைக்களத்தால் நாளதுவரையாக நடவடிக்கைகள் எடுக்கப்படாமை நீண்டகாலமாக இக் கடன் மீதிகள் நிலுவையாகக் காணப்படுவதற்குக் காரணமாகியிருந்தது.

(vii) முன்னைய ஆண்டில் காணப்பட்ட 23 கடனாளிகளிடமிருந்து கடன் மீதியாக மேலதிகமாக அறவிடப்பட்டிருந்த ரூபா 36,886 தொகை மீளாய்வாண்டுக் கணக்கிற்கு உள்ளடக்கப்பட்டிராததுடன் அம் மீதி தீர்க்கப்பட்ட விதம் குறித்து எவ்வித பதிவும் இணக்கக்கூற்றில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(viii) ஒரு வலைய நீர்ப்பாசனப் பணிப்பாளர் காரியாலயத்திலும் 03 நீர்ப்பாசனப் பொறியியலாளர் காரியாலயங்களிலும் கடன் பதிவேடுகளின் தனியான கடன் மீதி தவறாக அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்ததுடன் ஆண்டின் இறுதியிலான தனியான கடன் மீதிகளுக்கும் திறைசேரி அச்சீட்டுக் குறிப்புகளின் கடன் மீதிகளிற்கும் இடையே ரூபா 496,020 தொகையான தீர்க்கப்படாத வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

## 2.4 நல்லாளுகையும் கணக்களிப்புப்பொறுப்பும்

### கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு செயற்படுத்தப்படல்

2000 யூன் 12 ஆம் திகதிய ஐஏஐ/2000/1 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கையின் 01 ஆம் பந்தியின் படி, கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு காலாண்டிற்கு ஒரு முறையேனும் கூட்டப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டில் மூன்று குழுக் கூட்டங்கள் மாத்திரமே நடாத்தப்பட்டிருந்தன.

## 2.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

திணைக்களத்தால் சொத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வு பரிசோதனைகளின் போது பின்வரும் குறைபாடுகள் வெளிப்படுத்தப்பட்டன.

(அ) விளைவற்றதும் குறைவான பயன்பாடுடையதுமான சொத்துக்கள்

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2013 ஆம் ஆண்டிற்கான பொருள் மெய்மையாய்வு அறிக்கையின் படி, திணைக்களத்திடமிருந்த 267 அரசாங்க விடுதிகள் குடியிருப்பிற்கு உத்தியோகத்தர்கள் முன்வந்திராமை மற்றும் பழுதடைந்த நிலை போன்ற காரணங்களால் நீண்ட காலமாக பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ii) பதவிய நீர்ப்பாசனப் பொறியியலாளர் அலுவலகத்திற்கு உரித்தான 47 துப்பாக்கிகளும் 83 எஸ்ஜீ துப்பாக்கி இரவைகளும் 272 கைத்துப்பாக்கிகளும் பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்படாதிருந்தன.

(iii) 2013 ஆம் ஆண்டிற்கு உரித்தான மெய்மையாய்வு அறிக்கையின் படி, 2 வலய நீர்ப்பாசன பணிப்பாளர் அலுவலகங்களுக்கும் 7 நீர்ப்பாசனப் பொறியியலாளர் அலுவலகங்களுக்கும் உரித்தான வாகனங்களும் 13 இயந்திரங்களும் நீண்டகாலமாக பயன்பாடின்றி துரப்பிடித்துள்ளமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) வருடாந்த பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளல்

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2010 திசெம்பர் 17 ஆம் திகதிய பீஎப்/எப்எஸ்/மெய்மையாய்வுச் சபை/01 ஆம் இலக்க அரச நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் மூலம் திருத்தப்பட்ட 2009 திசெம்பர் 09 ஆம் திகதிய 441 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் படி, 2013 ஆம் ஆண்டின் வருடாந்த பொருள் மெய்மையாய்வு 2014 மார்ச் 15 ஆம் திகதிக்கு முன்னர் மேற்கொள்ளப்பட்டு அவ் அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் திணைக்களத்தின் 36 நீரப்பாசன அலுவலகங்களின்

பொருள் மெய்மையாய்வு அறிக்கைகள் 2014 மே 31 ஆம் திகதி வரையிலும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) மேற்குறித்த (i) ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட அலுவலகங்களில் கண்டி வலய நீர்ப்பாசனப் பணிப்பாளர் காரியாலயத்தின், அம்பாந்தோட்டை நீர்ப்பாசனப் பொறியியலாளர் அலுவலகத்தினதும், இரத்மலானை இயந்திரவியல் பொறியியலாளர் அலுவலகத்தினதும் தலைமைக் காரியாலயத்தின் போக்குவரத்துப் பிரிவினதும் பொருள் மெய்மையாய்வு 2012 ஆம் ஆண்டின் போதும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(iii) நிதிப் பிரமாணம் 756(2)(அ) இன் பிரகாரம், மெய்மையாய்வு செய்யப்பட வேண்டிய பொருட்கள் தொடர்பான அறிவுள்ள உத்தியோகத்தர் மெய்மையாய்வுச் சபைக்கு உள்ளடக்கப்பட வேண்டிய போதிலும் அத்தகைய உத்தியோகத்தரின் பங்கேற்பு இல்லாது தெதுருஓய வதிவிட பொறியியலாளர் காரியாலயம், கலுகல்ஓய செயற்திட்டம், அம்பாறை மற்றும் அநுராதபுரம் வலய நீர்ப்பாசனப் பணிப்பாளர்களின் அலுவலகங்களில் கணனி மற்றும் உதிரிப் பாகங்கள், பக்ஸ் இயந்திரம் போன்ற விடயங்கள் விற்பனை செய்யப்படுவதற்கும் அழிப்பதற்கும் மெய்மையாய்வுச் சபையால் பரிந்துரைக்கப்பட்டிருந்தது.

(iv) 2013 ஆம் ஆண்டிற்கு ஒப்பாக மெய்மையாய்வுச் சபை அறிக்கைகளிலிருந்து சுட்டிக்காட்டப்பட்டிருந்த மிகையும் பற்றாக்குறையும் தொடர்பாகவும் ஏனைய பரிந்துரைகள் தொடர்பாகவும் நிதிப் பிரமாணத்தின் படி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(v) இரம்புக்கன்ஓய வதிவிட பொறியியலாளர் காரியாலயத்தின் பொருட்கள் விநியோகிக்கப்படும் கட்டளைகளில் காண்பிக்கப்பட்டுள்ள விநியோகிப்பு அளவுகளை விட கூடிய அளவில் இருப்பு புத்தகங்களில் விநியோகிப்பாக குறிப்பிடப்பட்டுள்ளதாக மெய்மையாய்வுச் சபை அறிக்கைகளின் படி அவதானிக்கப்பட்டன.

(இ) வெளித்தரப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ள சொத்துக்கள்

------------------------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2013 இன் வருடாந்த பொருள் மெய்மையாய்வு அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டவாறு திணைக்களத்திடமிருந்த 43 உத்தியோகபூர்வ விடுதிகளில் அத்துமீறிய குடியிருப்பாளர்கள் இருந்த போதிலும் அவர்களை அகற்றுவதற்காக சட்டரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) 58 உத்தியோகபூர்வ விடுதிகள் வேறு திணைக்களங்களுக்கும் நிறுவகங்களுக்கும் முறையாக ஒப்படைக்கப்படாது வழங்கப்பட்டிருந்தமை 2013 இன் வருடாந்த பொருள் மெய்மையாய்வு அறிக்கைகளிலும் குறிப்பிடப்பட்டிருந்தன.

(ஈ) தீர்க்கப்படாத பொறுப்புகள்

------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) திணைக்களத்தால் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான தீர்க்கப்படாத பொறுப்புகள் ரூபா 635,836,768 தொகையானதுடன் அம் மீதி ஒரு வருடத்திற்கும் குறைவான காலப்பகுதிக்கு உரித்தானவையாகும்.

(ii) நிதிப் பிரமாணம் 94 இன் ஏற்பாடுகளுக்கு முரணாக தேறிய ஏற்பாட்டிற்கு மேலாக ரூபா 257,021,523 தொகையான பொறுப்புக்கள் ஏற்பட்டிருந்தன.

(iii) 2013 ஆம் ஆண்டின் ஒதுக்கீட்டுக் கணக்கில் ரூபா 7,039,884 பெறுமதியான பொறுப்புகள் வெளிப்படுத்தப்பட்டிருந்தன.

(உ) இரும்பு மிதவை

------------------------

மாத்தறை நில்வலா கங்கை செயற்திட்டத்தின் நிர்மாணிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வெளிநாட்டு ஒப்பந்தக் கம்பனி 1989 ஆம் ஆண்டின் போது ஒப்பந்தத்தை இடைநிறுத்திய சந்தர்ப்பத்தின்

போது மாகல்லாகொடை பம்பி நிலையத்திற்கு அருகாமையில் கைவிடப்பட்டுச் செல்லப்பட்டிருந்த ரூபா 10 மில்லியன் தொகைக்கு மேல் பெறுமதியான இரும்பு மிதவை ஒன்று திணைக்களத்தின் பொறுப்பிற்குக் கொண்டுவரப்பட்டு பாதுகாப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன. இதில் 2007 ஆம் ஆண்டின் போது இலங்கை தெற்கு அபிவிருத்தி அதிகாரசபை இம்மிதவை 10 ஆண்டுகளுக்கு மஹரகம தனியார் நிறுவகம் ஒன்றிக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் அக் குத்தகை வழங்கலுக்கு எதிராக நீர்ப்பாசனத் திணைக்களத்தால் பொலிஸில் மேற்கொள்ளப்பட்டிருந்த முறைப்பாட்டின் படி பொலிஸாரால் குத்தகையாளர்களின் செயற்பாடுகள் இடைநிறுத்தப்பட்டிருந்தன. இதற்கு எதிராக குத்தகைக்குப் பெற்றவர்களால் ரூபா 158 மில்லியன் தொகையான நட்டஈடு கோரி இலங்கை தெற்கு அபிவிருத்தி அதிகாரசபை, நீர்ப்பாசன பணிப்பாளர் நாயகம் மற்றும் மாத்தறை மாவட்டச் செயலாளர்கள் ஆகியோர் பிரதிவாதிகளாக்கப்பட்டு மேல்மாகாண சிவில் வர்த்தக உயர் நீதிமன்றத்தில் வழக்கு ஒன்று தொடரப்பட்டிருந்தன. இலங்கை தெற்கு அபிவிருத்தி அதிகாரசபைக்கு சட்டரீதியாக உரித்தற்ற இரும்பு மிதவை குத்தகைக்கிடுவதற்கு எதிராக திணைக்களத்தால் சட்டநடவடிக்கைகள் எடுக்கப்பட்டிராததுடன் தனியார் நிறுவகம் ஒன்றுடன் கைச்சாத்திடப்பட்ட குத்தகை உடன்படிக்கைக்கு சட்டரீதியான அங்கீகாரம் இன்மையை நீதிமன்றத்தில் தெளிவாக விளக்குவதற்கு திணைக்களம் தவறியிருந்தது.

## 2.6 இணக்கமின்மைகள்

-------------------------------

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் முதலியவற்றுடன் இணக்கமின்மைகள்**

-------------------------------------------------------------------------------------------------------------------------------

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்கியிராத சந்தர்ப்பங்கள் கீழே விபரித்துக் காண்பிக்கப்பட்டுள்ளது.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணக்கமின்மைகள் |
| --- | --- | --- |
| | ரூபா | |
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் | | |
| (i) நிதிப் பிரமாணம் 137 | 149,239 | கொழும்பு தலைமை அலுவலகத்திற்கும் இரத்மலானை இயந்திர வேலைத்தளத்திற்கும் உரித்தான 03 கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் அங்கீகாரம் இன்றி கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. |
| (ii) நிதிப் பிரமாணம் 227 | 655,550 | தலைமை அலுவலகம், இரத்மலானை இயந்திர வேலைத்தளம், அம்பாறை நீர்ப்பாசனப் பணிப்பாளர் அலுவலகம் மற்றும் இதன் கீழ் உள்ள நீர்ப்பாசனப் பொறியியலாளர் அலுவலகங்களின் புனரமைப்பு வடிவிலான செலவினங்கள் தவறாக மூலதனச் செலவினமாக வகைப்படுத்தப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருந்தன. |
| (ஆ) பொது நிர்வாகச் சுற்றறிக்கை | | |
| 2008 திசெம்பர் 31 ஆம் திகதிய 30/2008 ஆம் | 1,165,541 | உத்தியோகத்தருக்கு உரித்தான ஆகக் கூடுதலான |

| | | | |
|---|---|---|---|
| | இலக்க சுற்றறிக்கையின் 02 ஆம் பந்தி | | இடர் கடன் தொகை 10 மாத திரண்ட சம்பளம் அல்லது ரூபா 250,000 எனும் இரண்டில் குறைந்த தொகையான போதிலும் நான்கு உத்தியோகத்தர்களுக்கு ரூபா 250,000 இற்கு மேலதிகமாக இடர் கடன் செலுத்தப்பட்டிருந்தன. |
| (இ) | திறைசேரிச் சுற்றறிக்கை<br>--------------------------------------<br>2012 ஒக்டோபர் 08 ஆம் திகதிய பீடீ/ஏ/ஏஓ/பீசீ ஆம் இலக்க சுற்றறிக்கை | 5,565,022 | எரிபொருள் மற்றும் போக்குவரத்துப் படிப்பணத்தைப் பெற்றுக்கொள்ளும் உத்தியோகத்தர்கள் குறித்த பணிக்காக அவற்றைப் பயன்படுத்திக் கொள்கின்றனரா என்பது குறித்து 03 மாதங்களுக்கு ஒரு தடவை உள்ளகக் கணக்காய்வுப் பரிசோதனையின் மூலம் உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டிய போதிலும் அத்தகைய உறுதிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை<br>. |
| (ஈ) | **திறைசேரிச் செயற்பாட்டுச் சுற்றறிக்கை**<br>**--------------------------------------**<br>2013 நவம்பர் 18 ஆம் திகதிய 04.˙.2013 ஆம் இலக்க திறைசேரிச் | 198,619 | 2013 திசெம்பர் 31 ஆம் திகதிக்கு முன்னர் காசேடு தீர்க்கப்பட்டு எஞ்சிய தொகை வங்கியிலிடப்பட வேண்டிய போதிலும் திருகோணமலை வலய நீர்ப்பாசனப் பணிப்பாளர் |

| | |
|---|---|
| செயற்பாட்டுச் சுற்றறிக்கை | காரியாலயத்தின் காசேடு தீர்க்கப்பட்டு மீதி வங்கியிலிடப்பட்டிருக்கவில்லை. |

## 2.7 செயற்திட்ட நடைமுறைப்படுத்தலிலான நலிவுகள்

செயற்திட்டம் ஆரம்பிக்கப்படாது கைவிடப்படல் செயற்திட்டம் பூர்த்திசெய்யப்படாது கைவிடல் மற்றும் செயற்திட்ட தாமதங்கள் தொடர்பாக கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனையின் போது கண்டறியப்பட்ட சந்தர்ப்பங்கள் பின்வருமாறாகக் காணப்பட்டன.

### (அ) செயற்திட்டம் ஆரம்பிக்கப்படாது கைவிடப்படல்

திணைக்களத்தால் பின்வரும் செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டிராமை உள்ளகக் கணக்காய்வு அறிக்கையின் படி கண்டறியப்பட்டன.

| | செயற்திட்டம் | மதிப்பிடப்பட்ட கிரயம் | வேலை பூர்த்தி செய்யப்பட வேண்டிய திகதி | ஆரம்பிக்கப்படாமைக்கான காரணங்கள் |
|---|---|---|---|---|
| | | ரூபா | | |
| (i) | தம்புள்ளை நீர்ப்பாசன பொறியியலாளர் அலுவலகம் | | | |
| * | தேவகுவ செயற்திட்டத்தின் பிரதான வாய்க்காலின் 11000 மீட்டர் முதல் 12000 மீட்டர் வரை மேம்படுத்தல் | 92,665 | 2013.12.25 | குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. |
| * | தேவகுவ செயற்திட்டத்தின் பிரதான வாய்க்காலின் 12000 மீட்டர் முதல் 13000 மீட்டர் வரை மேம்படுத்தல் | 138,200 | 2013.12.25 | குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| * | தேவகுவ செயற்திட்டத்தின் பிரதான வாய்க்காலின் 13000 மீட்டர் முதல் 14000 மீட்டர் வரை மேம்படுத்தல் | 112,434 | 2013.12.25 | குறிப்பிடப்பட்டிருக்க வில்லை. |
| * | தேவகுவ செயற்திட்டத்தின் பிரதான வாய்க்காலின் 14000 மீட்டர் முதல் 15000 மீட்டர் வரை மேம்படுத்தல் | 100,700 | 2013.12.25 | குறிப்பிடப்பட்டிருக்க வில்லை. |

(i) ஹிரியால நீர்ப்பாசனப் பொறியியலாளர் அலுவலகம்

-------------------------------------------------------------------------------------

| | | | | |
|---|---|---|---|---|
| * | பத்தலகொட செயற்திட்டத்தின் வெலிவல தியபஸ்னா வாய்க்காலில் 750 மீட்டர்கள் இடப்பரப்பில் வெள்ளநீர் தாக்கத்தை திருத்துதல் | 97,998 | 2011.12.17 | குறிப்பிடப்பட்டிருக்க வில்லை |
| * | ஹக்வட்டுன ஒய செயற்திட்டத்தில் இடது பக்க மதகு பிரதான கால்வாய் மேம்படுத்தல் | 1,039,000 | - | குறிப்பிடப்பட்டிருக்க வில்லை |
| * | தியதுரே இடது பக்க மதகு பிரதான கால்வாயின் கெத் வால்க்காய் இல 06 மேம்படுத்தல் | 102,020 | 2012.11.21 | குறிப்பிடப்பட்டிருக்க வில்லை |
| * | கிம்புல்வான ஒய செயற்திட்டத்தின் இரத்மலே வாய்க்காலின் இடது மதகு பிரதான வாய்க்கால் மேம்படுத்தல் | 1,785,747 | 2012.11.02 | குறிப்பிடப்பட்டிருக்க வில்லை |

(ஆ) செயற்திட்டம் அமுலாக்கலிலான தாமதம்

திணைக்களத்தால் பின்வரும் செயற்திட்டங்கள் மேற்கொள்வதில் தாமதங்கள் அவதானிக்கப்பட்டன.

| **செயற்திட்டம்** | **மதிப்பிடப்பட்ட கிரயம்** | **ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு** | **நிறைவேற்றப்பட வேண்டிய ஆண்டு** | **2013 திசெம்பர் 31 வரையான செலவினம்** | **தாமதத்திற்கான காரணம்** |
|---|---|---|---|---|---|
| | **ரூபா மில்லியன்** | | | **ரூபா மில்லியன்** | |
| யான் ஒய | 8,700 | 2007 | 2012 | 532 | சுற்றாடல் மதிப்பீட்டு அறிக்கை அங்கீகரிக்கப்பட்டிராமை |
| கீழ் ஊவா நீர்த்தேக்கம் | 550 | 2005 | 2012 | 293 | மல்லிபொத்த வாவி நிர்மாணிக்கப்படுவதற்காக ஏற்ற மண் வழங்கல் சிக்கல் மற்றும் காணிக் கையேற்புச் சிக்கல்கள் |
| மஹாகோனா வாவி | 169 | 2008 | 2016 | 7 | சுற்றாடல் அங்கீகாரம் பெறுவதிலான தாமதங்கள் |
| கல்ஒய நவோதய | 1,260 | 2009 | 2012 | 589 | ஏனைய பாதுகாப்பகங்களின் நடவடிக்கைகள் பூரத்திசெய்யப்பட முடியாமை |
| மொறான நீர்த்தேக்கம் | 1,700 | 2012 | 2014 | 140 | கட்டுநிதிப் பற்றாக்குறை |
| அல்லே வாவி | 467 | 2012 | 2013 | இல்லை | காணிச் சிக்கல்கள் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| தீகீலி ஒயா | 1,460 | 2012 | 2014 | இல்லை | சுற்றாடல் அங்கீகாரம் பெற்றுக்கொள்வதிலான தாமதம் |
| கலுகல் ஒயா | 1,481 | 2012 | 2015 | 39 | சுற்றாடல் மதிப்பீட்டு அறிக்கை பெறுவதிலுள்ள தாமதம் |
| கும்புக்கன் ஒயா | 10,000 | 2012 | 2013 | இல்லை | சுற்றாடல் அங்கீகாரம் பெற்றுக்கொள்வதிலான தாமதம் |
| குருகல் ஒயா | 400 | 2009 | 2012 | 334 | சீரற்ற காலநிலை காரணமாக பக்கச்சுவரின் அத்திவாரம் இடப்படுவதற்கு தாமதமாகியது. |
| நாபேஉடவதுர | 40 | 2007 | 2012 | 15 | சீரற்ற காலநிலை காரணமாக மண் வேலைகள் மேற்கொள்ளப்பட முடியாது போனதுடன் கட்டுநிதி போதாதிருந்தது. |
| விலக்கண்டிய | 81 | 2011 | 2012 | 15 | கட்டுநிதிப் பற்றாக்குறை |
| கோனகல தென்ன | 55 | 2012 | 2013 | 0.5 | வனசீவராசிகள் மற்றும் தொல்பொருளியல் திணைக்களத்திலிருந்து அங்கீகாரம் கிடைக்கப்பெற்றிராமையால் காணி கையேற்றலில் தாமதம் |

## 2.8 செயலாற்றல்

### (அ) போதியளவில் மேற்கொள்ளப்படாது பிரதான பணிகள்

வருடாந்த ஒதுக்கீட்டு அதிகாரச்சட்டத்தின் மூலம் அல்லே வாவி, திகீலி ஒயா, கும்புக்கன் ஒயா, மஹாவலி நீர் வடமேல் மாகாணத்திற்கு திருப்புதல், வேமடில்ல நீர்த்தேக்கம், ஹேகித்த சிறிய வெள்ள பாதுகாப்புத் திட்ட நிர்மாணிப்பு, கவுடுல்ல வாவி கட்டம் II பெத்தியாகொட தம்சோபுர வரை நீடித்தல், மஹாகல்கமுவை வாவியை விசாலமாக்கல், பெத்தியாகொட நீர்ப் பம்பி நிலைய நிர்மாணிப்பு போன்ற 09 செயற்திட்டங்களுக்காக ரூபா 607 மில்லியன் தொகையான ஏற்பாடு வழங்கப்பட்டிருந்த போதிலும் மதிப்பீட்டு அறிக்கைகள் இன்மை, நட்டஈடு வழங்கப்படல் மற்றும் மீள்குடியேற்றப் பிரச்சனைகள், அடிப்படைச் செயற்பாடுகள் பூர்த்தியின்மை, காணிகளைக் கையேற்றல் பூர்த்திசெய்யப்படாமை போன்ற காரணங்களால் அச் செயற்திட்டம் 2013 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டிராததுடன் அவ் ஏற்பாடுகளில் ரூபா 602 மில்லியன் தொகை வேறு செயற்திட்டங்களுக்காக மாற்றப்பட்டிருந்தன.

## 2.9 வங்கிக் கணக்குச் செயற்பாட்டிலான குறைபாடுகள்

### சீராக்கப்பட வேண்டிய மீதி

திணைக்களத்தால் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தயாரிக்கப்பட்டிருந்த வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்ட சீராக்கங்கள் தொடர்பான விபரத்தின் படி, கண்டறியப்பட்ட தகவல்கள் பின்வருமாறாகும்.

(அ) 19 வங்கிக் கணக்குகளிலிருந்து வழங்கப்பட்ட எனினும் கொடுப்பனவிற்காகச் சமர்ப்பிக்கப்படாத 06 மாதங்கள் கடந்த ரூபா 85,894 பெறுமதியான 30 காசோலைகள் தொடர்பாக நிதிப் பிரமாணம் 396(ஈ) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அநுராதபுரம், அம்பாறை, பண்டாரவெல, கண்டி, குருநாகல், திருகோணமலை மற்றும் வவுனியா போன்ற வலய நீர்ப்பாசன பணிப்பாளர் காரியாலயங்களில் நிலவிய நீண்ட காலம் முதல்

செயற்படாத 07 வங்கி நடைமுறைக் கணக்குகள் மூடப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.10 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்**

திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்டிருந்த சில கொடுக்கல் வாங்கல்கள் சர்ச்சைக்குரித்தானவையாகக் காணப்பட்டன. தெரிவுப் பரிசோதனையின் போது கண்டறியப்பட்ட அத்தகைய சில கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான விபரங்கள் பின்வருமாறாகக் காணப்பட்டன.

(அ) இரம்புக்கன் ஒய நீர்ப்பாசனச் செயற்திட்ட ஏற்பாடுகளில் ரூபா 5,493,285 தொகையான பணம் மஹாஓயா வைத்தியசாலையின் மகப்பேற்றுப் பிரிவின் கட்டிட நிர்மாணிப்பிற்குத் தேவையான பொருட்களின் கொள்வனவிற்காகப் பயன்படுத்தப்பட்டிருந்தன.

(ஆ) இரம்புக்கன் ஒயா நீர்ப்பாசனச் செயற்திட்டத்தை ஆரம்பிக்கும் நிகழ்ச்சிக்கு மொனறாகலை, பதுளை, தெஹிஅத்தகன்டிய போன்ற பகுதிகளிலிருந்து மக்களைக் கொண்டுசென்றமைக்காக ரூபா 2,143,527 தொகை இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் செலுத்தப்பட்டிருந்ததுடன் வெளிமாகாணங்களில் பொது மக்கள் இவ் ஆரம்பிப்பு வைபவத்திற்குக் கொண்டுசெல்லும் நோக்கம் விளக்கப்பட்டிருக்கவில்லை.

**2.11 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

திணைக்களத்தால் ஏற்படுத்தப்பட்டிருந்த சில கொடுக்கல் வாங்கல்கள் முறையற்றவையாகக் காணப்பட்டன. அவதானிக்கப்பட்ட அத்தகைய சந்தர்ப்பங்கள் சில பின்வருமாறாகக் காணப்பட்டன.

**(அ) அதிகாரப் பொறுப்பற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) இலங்கை பொறியியல் சேவையில் முதலாம் தரத்திற்கும் நீரப்பாசனப் பணிப்பாளர் பதவிகளுக்கும் முறையாக

பதவிநியமனம் பெற்றிராத 12 உத்தியோகத்தர்களுக்கு 14/2008 ஆம் இலக்க மற்றும் 13/2008 (iv) ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் பிரகாரம் போக்குவரத்து மற்றும் எரிபொருள் படிப்பணமாக 2013 ஆம் ஆண்டின் போது ரூபா 4,539,306 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(ii) 2009 பெப்ரவரி 20 ஆம் திகதிய 1589/30 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுச் செயலாளரால் வெளியிடப்பட்டிருந்த பணி விதிமுறைத் தொகுப்பின் VII ஆம் அத்தியாயத்தின் கீழ் மேலதிக நீர்ப்பாசனப் பணிப்பாளர்கள், நீர்ப்பாசனப் பணிப்பாளர்கள் (சிவில் மற்றும் இயந்திரம்), பணிப்பாளர் காணிப் பயன்பாடு, பிரதான நிதி உத்தியோகத்தர் போன்ற 44 பதவிகளுக்காக நியமனங்கள் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் மூலமேயான போதிலும் நீர்ப்பாசன மற்றும் நீரியல் வள முகாமைத்துவ அமைச்சுச் செயலாளரின் மேவுகை அங்கீகாரத்தின் கீழ் இப் பதவிகளுக்காக நீர்ப்பாசனப் பணிப்பாளர் நாயகத்தால் நியமனங்கள் வழங்கப்பட்டிருந்தன.

(iii) முகாமைத்துவ சேவைகள் திணைக்களப் பணிப்பாளர் நாயகத்தின் 2013 சனவரி 08 ஆம் திகதிய டீஎம்எஸ்/ஜீ2/56/15/01/வீஓஐ/.1 ஆம் இலக்க கடிதத்தின் படி, 03 மேலதிக நீரப்பாசனப் பணிப்பாளர் நாயகப் பதவிகளும் பிரதான நிதி உத்தியோகத்தர் பதவிகளுக்காக இலங்கை பொறியியல் சேவைகள் மற்றும் இலங்கை கணக்காளர் சேவையின் விசேட தர உத்தியோகத்தர்களும் பணிப்பாளர் (இயந்திரம் மற்றும் சிவில்) 09 பதவிகளுக்காக இலங்கை பொறியியல் சேவை I ஆம் தரத்தின் உத்தியோகத்தர்களும் நியமிக்கப்பட வேண்டிய போதிலும் தகைமைகள் கொண்டிராத உத்தியோகத்தர்கள் அப்பதவிகளுக்கு நியமிக்கப்பட்டிருந்தனர்.

## 2.12 மோசடியான தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

------------------------------------------------------------------------------------------

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது மோசடித் தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான விபரங்கள் பின்வருமாறாகக் காணப்பட்டன.

(அ) கொழும்பிற்குத் தொலைவில் உள்ள தமது வீடுகளிலிருந்து புகையிரத சலுகைப் பருவச்சீட்டுக்கள் பெற்று தலைமைக் காரியாலயத்திற்குக் கடமைக்குச் சமூகமளித்த நீர்ப்பாசன பணிப்பாளர்கள் மூவருக்கு 2013 ஆம் ஆண்டின் போது ரூபா 646,388 தொகையான மாதாந்த போக்குவரத்து மற்றும் எரிபொருள் படிப்பணம் செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) தாபன விதிக் கோவையின் XVII ஆம் அத்தியாயத்தின் I ஆம் பிரிவின் பிரகாரம் சலுகைப் பருவச்சீட்டுக்கள் பெற்றுக்கொள்ளப்படுவதற்கு உரித்தற்ற எனினும், போலிப் பதவிப் பெயர்கள் உள்ளடக்கி சலுகைப் பருவகாலச்சீட்டுக்கள் பெற்றுக்கொண்ட குறித்த விடய ஊழியர்கள் நால்வர் தொடர்பாக சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படாது தொடர்ந்து சேவையில் ஈடுபடுத்தி ரூபா 604,159 தொகையான சம்பளம் செலுத்தப்பட்டிருந்தது. மேலும் ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்கப்படுவதற்குப் பதிலாக அவர்களது சேவை நிரந்தரமாக்கப்பட்டிருந்தது. இப் போலி ஆவணங்கள் தயாரிக்கப்பட்ட கொடுக்கல்வாங்கல் காரணமாக அரசாங்கத்திற்கு ஏற்பட்டிருந்த ரூபா 124,436 தொகையான நட்டத்தை அறவிடுவதற்கும் அதற்குத் துணைபுரிந்த உத்தியோகத்தருக்கு எதிராகவும் ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.13 தீர்க்கப்பட்டிராத கணக்காய்வுப் பந்திகள்

------------------------------------------------------------------

திணைக்களத்திற்கு உரித்தான கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்டிருந்த கணக்காய்வுப் பந்திகளின் பின்தொடர் நடவடிக்கைகள் பூர்த்திசெய்யப்படாத பந்திகளுக்கான தொடர்பு பின்வருமாறாகக் காணப்பட்டது.

| கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கையுடனான தொடர்பு | | தொடர்புபட்ட விடயம் |
|---|---|---|
| ஆண்டு | பந்தி இல. | |
| 2006 | 3.1(அ) | சுகலாதேவி வாவி செயற்திட்டத்தின் கீழ் பொறியியல் உதவியாளர் மேற்கொண்டிருந்த முறைகேடு |
| 2006 | 3.1(ஆ) | வெலி ஓயா செயற்திட்டத்தின் கீழ் மேற்கொண்டுள்ள முறைகேடுகள் |
| 2006 | 2.4.1 | போலி ஆவணங்கள் சமர்ப்பித்து ஆதனக் கடன் பெற்றுக் கொண்டமை |
| 2006 | 7.2(அ) | வெஹெரகல செயற்திட்டத்திற்காக கொங்கிரீட் கலவை இயந்திரக் கொள்வனவு |
| 2008 | 7(இ)(i) | வாகனம் ஒன்று விபத்திற்குள்ளானமையால் ரூபா 210,000 தொகையான நட்டம் ஏற்பட்டிருந்தமை. |

## 2.14 முகாமைத்துவ நலிவுகள்

தெரிவுக் கணக்காய்வின் போது பின்வரும் நலிவுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) 1946 இன் 32 ஆம் இலக்க நீர்ப்பாசனக் கட்டளைச் சட்டம் மற்றும் அவ்வப்போது அதற்கு மேற்கொள்ளப்பட்ட திருத்தங்கள் நடைமுறைக்கு இணங்கும் வகையில் திருத்தங்கள் மேற்கொள்ளப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2013 ஆம் ஆண்டின் போது நீர்ப்பாசனத் திணைக்களத்தின் பதவியணியினர் சீராக்கப்பட்டதை அடுத்து அதனை மறுசீராமைப்பதற்கு உரித்தாக சரியான ஒழுங்கமைப்புக் குறிப்பொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2013 ஆம் ஆண்டின் போது தயாரிக்கப்பட்ட மறுசீரமைப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நியமனங்கள் மேற்கொள்ளப்பட்ட பின்வரும் 85 உத்தியோகத்தர்களுக்கு கடமைப் பட்டியல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

| **பதவி** | **பதவிகளின் எண்ணிக்கை** |
|---|---|
| மேலதிக நீர்ப்பாசனப் பணிப்பாளர் நாயகம் | 03 |
| பிரதான பொறியியலளர் | 40 |
| நீர்ப்பாசன பணிப்பாளர் (சிவில்) | 36 |
| நீர்ப்பாசனப் பணிப்பாளர் (இயந்திரம்) | 03 |
| பிரதான பொறியியலாளர் (இயந்திரம்) | 03 |
| மொத்தம் | 85 |

## 2.15 மனிதவள முகாமைத்துவம்

(அ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியும் உள்ளபடியான பதவியணியும்

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பதவியணி தொடர்பான நிலை பின்வருமாறாகக் காணப்பட்டது.

| | **பதவியணி வகை** | **அங்கீகரிக்கப்பட்ட பதவியணி** | **உள்ளபடியான பதவியணி** | **வெற்றிடங்களின் எண்ணிக்கை** |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 408 | 265 | 143 |
| (ii) | மூன்றாம் நிலை | 180 | 30 | 150 |
| (iii) | இரண்டாம் நிலை | 2,703 | 1,562 | 1,141 |
| (iv) | ஆரம்ப நிலை | 2,386 | 1,550 | 836 |
| | மொத்தம் | 5,677 | 3,407 | 2,270 |

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நிலவிய 2,270 வெற்றிடங்களை நிரப்புவதற்காக திணைக்களம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ii) இவ் உள்ளபடியான பதவியணிக்கு மேலதிகமாக ஒப்பந்த அடிப்படையில் பல்வேறு சேவைகளில் 187 பேர் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன் இதற்கு மேலதிகமாக அமைய மற்றும் குறித்த விடய அடிப்படையிலும் ஊழியர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்த போதிலும் இது தொடர்பாக சரியான எண்ணிக்கை கொண்ட தகவல்கள் திணைக்களத்திடம் இருக்கவில்லை.

(iii) நிரந்தர பதவியணி 5,677 ஆக கணக்காய்விற்கு உறுதிப்படுத்தப்பட்டிருந்த போதிலும் இது 4,598 ஆக 2013 ஆம் ஆண்டின் அரசாங்க வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டிற்கு உள்ளடக்கப்பட்டிருந்தது. 1,079 ஆன வேறுபாட்டிற்கான காரணம் தெளிவாக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) முறையற்ற விதத்தில் வேறு தரப்பினருக்கு விடுவிக்கப்பட்ட மனித வளங்கள்**

திணைக்களத்தால் மீளாய்வாண்டின் போது வேறு தரப்பினருக்கு முறையற்ற விதத்தில் விடுவிக்கப்பட்டிருந்த மனித வளங்கள் தொடர்பான விபரம் பின்வருமாறாகும்.

| | ஊழியர் வகை | பதவியணி எண்ணிக்கை | ஏனைய தரப்பினர் | விடுவிக்கப்பட்டிருந்த காலப்பகுதி |
|---|---|---|---|---|
| (i) | நீர்ப்பாசனப் பொறியியலாளர்கள் | 05 | நீர்ப்பாசன மற்றும் நீரியல்வள முகாமைத்துவ அமைச்சு | குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | நீர்ப்பாசனப் பொறியியலாளர்கள் | 01 | மேற்படி | 2013.08.06 முதல் |

| | | | | |
|---|---|---|---|---|
| (iii) | நீர்ப்பாசனப் பொறியியலாளர்கள் | 01 | உமா ஓயா செயற்திட்டம் | 2013 சனவரி முதல் |
| (iv) | திட்டமிடல் வடிவமைப்பாளர் | 01 | நீர்ப்பாசன மற்றும் நீரியல்வள முகாமைத்துவ அமைச்சு | 2008 சனவரி முதல் |
| (v) | பொறியியல் உதவியாளர்கள் | 01 | மேற்படி | 2012 ஏப்ரல் முதல் |
| (vi) | திட்டமிடல் வடிவமைப்பாளர் | 01 | சனாதிபதி விசாரணைப் பிரிவு | 2005 மார்ச் முதல் |
| (vii) | திட்டமிடல் வடிவமைப்பாளர் | 01 | மேற்படி | குறிப்பிடப்பட்டிருக்கவில்லை |
| (viii) | துளையிடல் உதவியாளர்கள் | 01 | மேற்படி | 2001 மே முதல் |
| (ix) | துளையிடல் உதவியாளர்கள் | 01 | மேற்படி | 2005 மார்ச் முதல் |
| (x) | திட்டமிடல் வடிவமைப்பாளர் | 01 | ஆட் பதிவு திணைக்களம் | 2013 சனவரி முதல் |
| (xi) | திட்டமிடல் வடிவமைப்பாளர் | 01 | இலங்கை மஹாவலி அதிகாரசபை | 2013 ஒக்டோபர் முதல் |
| (xii) | சாரதி | 01 | நீர்ப்பாசன மற்றும் நீரியல்வள முகாமைத்துவ அமைச்சு | குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. |
| (xiii) | இயந்திர பொறியியலாளர்கள் | 01 | மேற்படி | குறிப்பிடப்பட்டிருக்கவில்லை |